**<u>IN THE COURT OF THE SUBORDINATE JUDGE OF ATTUR</u>**

**DEPOSITION OF WITNESS**

**R.W.3**

**MCOP No. 47/2020**

| | | |
|---|---|---|
| **Name** | : | மாதேஷ் |
| **Father's Name** | : | பெருமாள் |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 25.09.2025.**

**எ.ம.சா.3 முதல் விசாரணை:-**

1) நான் நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். நான் உளிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் wiring வேலை செய்து வருகிறறேன். நான் விபத்து சமயத்தில் ஓட்டுநராக வேலை பார்த்து வந்தேன். TN 77 B 6823 என்ற டாடா ஏஸ் வாகனத்தை ஓட்டி வந்தேன். அந்த வாகனத்தை கெங்கவல்லியில் இருந்து தம்மம்பட்டி நோக்கி கொஞ்சம் காய் கறிகளுடன் 22.02.2019 ம் தேதி ஓட்டி வந்து சொண்டு இருந்தேன். அப்போது மாலை கொண்டையம்பட்டி பாலம் அருகில் வந்தபோது காய்கறி விற்பதற்காக வாகனத்தை சாலை ஓரமாக நிறுத்தி விற்பனை செய்து கொண்டு இருந்தேன். காய்கறி வாங்கிகொண்டு இருக்கும்போது பின்னாடியில் இருந்து வேகமாக வந்த TN 77 3532 வாகனம் என் வாகனத்தின் பின்னால் மோதி விட்டது. காய்கறி வாங்கிகொண்டிருந்த சுமார் 50 வயதுள்ள பெண் மீது மேற்படி வாகனம் மோதி விட்டது. இது சம்மந்தமாக TN 77 3532 வாகனம் மீது போலீசார் வழக்கினை

பதிவு செய்து குற்ற பத்திரிக்கையும் தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி TN 77 3532 வாகனத்தை ஓட்டி வந்தவர் மீது தான் தவறு உள்ளது.

**குறுக்கு விசாரணை**

2) நான் விபத்து ஏற்பட்ட சமயத்தில் ஓட்டுநராக வேலை பார்த்து வந்தேன். ஓட்டுநராக வேலை பார்ப்பதற்கு வாகன ஓட்டுநர் உரிமம் வேண்டும. விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது. ஓட்டுநர் உரிமம் இல்லை என்று போலீசார் நோட்டீஸ் கொடுத்துள்ளன்ர என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. எனவே சாட்சி அசல் ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்ய உத்தரவிட்டு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.09.25 14:40:35 +0530

**Accidents Claim Tribunal,**
**Attur.**